<u>**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**</u>

<u>**அ.வ.எண்.45/2017**</u>

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு. ராஜா முகமது, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2022 ஆண்டு செப்டம்பர் மாதம் 03-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 03.09.2022**

**பெயர் - ராஜ் கமல்**

**த/பெ - நேசமணி**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 11.50 a.m.**

<u>**குறுக்கு விசாரணை**</u> -

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் B.Sc. (psychology ) மற்றும் BPT பிசியோ தரப்பி படித்துள்ளேன். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணங்களை படித்து பார்த்து கையொப்பம் இட்டேனா என்றால் படித்து பார்த்து தான் கையொப்பம் இட்டேன். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பிரமான வாக்குமூலத்தை எந்த தேதியில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை 2017ல் வழக்கு தாக்கல் செய்த தேதியில் இருந்து அது நிலுவையில் இருந்து வந்துள்ளது. 15.04.2021 அன்று நான் மேற்படி பிரமான வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தேதி சரியாக நினைவில் இல்லை.

2. 2021ல் எனக்கு என்ன வயது என்றால் 36 வயது. 2017ல் எனக்கு 31 வயது. நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள பிரமான பத்திரத்தில் எனது வயது 32 என உள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் நான் எனது வயதை கூட தவறாக குறிப்பிட்டு பிரமான பத்திரம் தாக்கல் செய்துள்ளேன் என்றும் தவறான நோக்கத்தில் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நிலத்தின் உரிமையாளர் ராஜி செட்டியார் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனது தந்தையார் மூலம் தெரியும்.

3. நான் எனது வழக்கில் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் தான் தற்போதும் வசிக்கிறேனா என்றால் ஆமாம். இந்த பத்திரம் எழுதும் போது ராஜி செட்டியார் எங்கு இருந்தார் என்றால் பழவேற்காடு. என்னுடைய இருப்பிடத்திற்கும் ராஜி செட்டியார் இருப்பிடத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 27 கிலோமீட்டர் தூரம் இருக்கும். ராஜி செட்டியாரை நான் எவ்வளவு முறை பார்த்துள்ளேன் என்றால் பல முறை பார்த்துள்ளேன். இதற்கு முன் நான் வேறு ஏதேனும் சொத்து வாங்கியுள்ளேனா என்றால் எனது தந்தையார் இறந்த பிறகு வாங்கியுள்ளேன். மேற்படி சொத்தை வாங்கும் போது சொத்தின் உரிமை தாரர் மட்டுமே கையொப்பம் இடுவது வழக்கமா அல்லது அவரது குடும்பத்தார் அனைவரும் கையொப்பம் இடுவார்களா என்றால் சொத்தின் உரிமைதாரர் கையொப்பம் இடுவார் அவருக்கு வாரீசு தாரர் இருந்தால் அவரிடமும் கையொப்பம் வாங்குவது வழக்கம்.

4. வாசா ஆ 2 போடும் போது ராஜி செட்டியார் என்ன தொழில் செய்து வந்தார் என்றால் மீன் வலைக்கடை வைத்திருந்தார். மேற்படி பழவேற்காட்டில் மீன் வலைக்கடை எத்தனை நபர்கள் அந்த கால கட்டத்தில் வைத்திருந்தார்கள் என்றால் நிறைய நபர்கள் வைத்திருந்தார்கள். எந்த பெயரில் ராஜி செட்டியார் கடை வைத்திருந்தார் என்றால் சின்ன கடை வைத்திருந்தார் பெயர் எதுவும் இல்லை. எத்தனை வருட காலமாக அந்த கடையை நடத்திவந்தார் என்று எனக்கு தெரியாது. வாசா ஆ 2 ஒப்பந்த பத்திரத்தை யார் தயார் செய்தது என்றால் எனக்கு தெரியாது. நான் அந்த ஒப்பந்த பத்திரம் கையொப்பம் செய்யும் போது அங்கு இல்லையா என்றால் இல்லை எனது தந்தையாரும் ராஜி செட்டியாரும் தான் சேர்ந்து கையொப்பம் இட்டுள்ளனர். ராஜி செட்டியாரும் எனது தந்தை மட்டுமே அந்த ஒப்பந்த பத்திரத்தில் கையொப்பம் இட்டுள்ளனரா என்றால் ராஜி செட்டியாரின் மகன்களும் அந்த பத்திரத்தில் கையொப்பம் இட்டதாக எனது தந்தையார் கூறி தெரிந்து கொண்டேன் அவர்களை பார்த்ததில்லை.

5. வாசா ஆ 2 குறித்து நான் எப்போது தெரிந்துக்கொண்டேன் என்றால் மேற்படி ஒப்பந்தம் கையொப்பம் இட்ட இரவே தெரிந்துக்கொண்டேன் எனது தந்தை கூறினார். மேற்படி ஒப்பந்தம் கையொப்பம் இட்ட தினத்தில் ராஜி செட்டியாரிடம் இருந்து எனது தந்தையார் என்னென்ன ஆவணம் பெற்றுக்கொண்டார் என்றால் சம்மந்த பட்ட நிலத்தின் அனைத்து ஆவணங்களின் நகல்களை பெற்றுக்கொண்டார். விற்பனை ஒப்பந்தத்தின் படி குறிப்பிட்ட

காலத்திற்குள் ஏன் முழு தொகை கொடுத்து கிரையம் செய்து கொள்ளவில்லை என்றால் விற்பனை தொகையாக ரூபாய் 62100/- நிர்ணயிக்கப்பட்டு அதன் முன் பணமாக ரூபாய் 30000/- கொடுக்கப்பட்டு மீதம் உள்ள தொகையில் ரூபாய் 15,000/- கொடுத்து கால அவகாசத்தை நீட்டித்துக்கொண்டோம் அதன் பிறகு மீதம் உள்ள தொகையை கொடுப்பதற்குள் ராஜி செட்டியார் இறந்துவிட்டார்.

6. விற்பனை ஒப்பந்தத்தின் படி எத்தனை மாத கால ஆவகாசம் கிரையம் செய்வதற்கு கொடுக்கப்பட்டது என்றால் 2004க்குள் கிரையம் செய்வதாக ஒப்பந்தம் செய்வதாக தெரியும் தேதி ஞாபகம் இல்லை. வாசா ஆ 2ன் படி மூன்றாவது பக்கத்தில் 13.04.2004க்குள் கிரையம் செய்ய வேண்டும் என குறிப்பிட்டுள்ள நிலையில் ஏன் மீதம் உள்ள தொகையை கொடுத்து அந்த தேதிக்குள் கிரையம் செய்ய வில்லை என்றால் அந்த நேரத்தில் முழு தொகை இல்லாத காரணத்தினால் மேற்படி கால அவகாசத்தை ரூபாய் 15,000/- கொடுத்து நீட்டித்துக்கொண்டோம் பிறகு ராஜி செட்டியார் இறந்துவிட்டார்.

7. வாசா ஆ 2ல் கால நீட்டிப்பு செய்த ரசீதினை யார் எழுதியது என்றால் எனக்கு தெரியாது எனது தந்தையாருக்கு தான் தெரியும். மேற்படி வாசா ஆ 2 ஒப்பந்தம் கையொப்பம் இடும் போதும் அதை காலநீட்டிப்பு செய்யும் போதும் நான் அந்த இடத்தில் இல்லை என்றால் சரிதான். நான் எனது தந்தையாருக்கு எத்தனையாவது மகன் என்றால் முதல் மகன். எந்த காரணத்தினால் காலநீட்டிப்பு செய்து ரசீது போடும் நேரத்தில் நான் உடன் இல்லை என்றால் மேற்படி ஆவணத்தை கையொப்பம் இடும் போது அனைத்தையும் எனது தந்தையாரே கவனித்துவந்தார் இடையிடையில் பள்ளி இல்லாத சமயத்தில் என்னை அழைத்து செல்வார். வாசா ஆ 2ல் மேற்படி கால நீட்டிப்பு ரசீதில் யார் யார் சாட்சி கையொப்பம் இட்டுள்ளார்கள் என்றால் ராஜி செட்டியார் என்று உள்ளது அதற்கு கீழ் என்ன உள்ளது என்று எனக்கு தெரியவில்லை அது ஆங்கிலத்தில் உள்ளது.

8. தற்போது வழக்கு சொத்தின் அனுபவத்தில் யார் உள்ளது என்றால் வழக்கு தொடுத்ததில்இருந்து அங்கே யாரும் இல்லை அங்கே நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதாக அறிவிப்பு பலகை வைக்கப்பட்டது. மேற்படி அறிபவிப்பு பலகை தற்போதும் அங்கு உள்ளதா என்றால் இல்லை ராஜி செட்டியாரின் வாரீசு தாரர்கள் அந்த பலகை அங்கிருந்து அகற்றிவிட்டு அங்கு ஒரு வருடம் பயிர் செய்தனர் பின்னர் காவல் துறையில் புகார் அளித்து அங்கு தற்போது

யவரும் இல்லை. தாவா சொத்தில் அறிவிப்பு பலகை வைக்க நீதிமன்றத்தில் உத்தரவு பெறவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் தற்போது சுவாதீணத்தில் உள்ளது யார் என்றால் யாரும் இல்லை. நான் எந்த சூழ்நிலையிலாவது தாவா சொத்தின் சுவாதீணத்தில் இருந்ததுன்டா என்றால் இருந்துள்ளேன். எதன் அடிப்படையில் அங்கே சுவாதீணத்தில் இருந்ததாக நான் கூறுகிறேன் என்றால் சொத்தை வாங்கிய உரிமையில் இருந்தோம்.

9. சொத்தின் அசல் ஆவணங்களை ராஜி செட்டியார் எங்களிடம் கொடுத்தாரா என்றால் எனது தந்தையாரிடம் கொடுத்து பின்பு ஒப்பந்த காலநீட்டிப்பு செய்த போது மேற்படி அசல் ஆவணங்களை கிரைய பத்திரம் பதிவு செய்வதற்காக எனது தந்தையாரிடம் இருந்து ராஜி செட்டியார் பெற்றுக்கொண்டார். ராஜி செட்டியார் எந்த காலத்திலும் வழக்கு சொத்தின் சுவாதீணத்தை எங்களிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எனது பிரமான பத்திரத்தின் இரண்டாவது பக்கத்தில் முதலாம் பத்தியில் மேலிருந்து நான்காவது வரியில் 20.03.2004ம் தேதியன்று எனது தகப்பனர் ரூபாய் 15000/- ராஜி செட்டியாரிடம் கொடுத்தபோது தாவா சொத்தின் சுவாதீணத்தை எனது தந்தையாருக்கு ஒப்படைத்துவிட்டதாகவும் அதன் பெயரில் எனது தந்தையார் கிஸ்து செலுத்திவந்ததாகவும் நான் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

10. மேற்படி விசாரணையில் எனது தகப்பனாரிடம் ராஜி செட்டியார் தாவா சொத்தின் சுவாதீணத்தை ஒப்படைக்கவில்லை என்று கூறும் பட்சத்தில் எவ்வாறு கிஸ்து ரசீது செலுத்தியதாக கூறுகிறேன் என்றால் எனது தந்தையார் தான் கிஸ்து செலுத்திவந்தார் எனக்கு அது குறித்து தெரியாது. வாசா ஆ 5 என்ன ஆவணம் என்றால் நிலவரி ரசீது ஆகும். மேற்படி ரசீதில் யாருக்காக யார் பணம் செலுத்தியதாக உள்ளது என்றால் சம்மந்த பட்ட இடத்திற்கு எனது தந்தை வரி செலுத்தியாக உள்ளது. மேற்படி வாசா ஆ 5 தவறாக அரசு அதிகாரிகளிடம் கையூட்டு கொடுத்து பெறப்பட்டது என்றால் சரியல்ல.

11. ராஜி செட்டியார் எப்போது இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி நான் தாக்கல் செய்துள்ள வாசா ஆ 2 ஒப்பந்தத்தை உண்மையாக போட்டு இருந்தால் மீதி பணம் கொடுப்பதற்காக ராஜி செட்டியாரை தேடிஇருப்பேன் என்றும் நான் மேற்படி ஆவணத்தை

உண்மையாக போடாடதால் தான் ராஜி செட்டியார் இறந்தவிவரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தையாருக்கு தெரியும்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

**விசாரணை முடியும் நேரம்- 12.44 p.m.**